செ.வெ.எண்:136 நாள்:02.03.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத்துறையின் மூலம் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா-2018 - மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

----

திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத்துறையின் மூலம் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா-2018 தொடக்க நிகழ்ச்சி டவுண் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (02.03.2018) நடைபெற்றது.

பள்ளி கல்வித்துறையின் மூலம் தேர்வு செய்யப்பட்ட மூலகரைப்பட்டி, கல்லணை, துலுக்கர்பட்டி, ரஸ்தா ஆகிய அரசு மேல்நிலை பள்ளிகளை சார்ந்த கிராமப்புற ஏழை எளிய 150 மாணவ மாணவிகள் இந்த சுற்றுலாவில் பங்கேற்றனர். 3 பேருந்துகளில் பள்ளி மாணவ மாணவிகள் திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டு கிருஷ்ணாபுரம், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் பார்வையிட்டு பின்பு அங்கிருந்து கன்னியாகுமரி (காந்தி மண்டபம், காமராஜர் மண்டபம், அரசு அருங்காட்சியகம், அருள்மிகு பகவதிஅம்மன் ஆலயம்) ஆகிய பகுதிகளில் சுற்றி காண்பித்து திருநெல்வேலி திரும்புதல் வகையில் சிறப்பான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுற்றுலாத்துறை செய்துள்ளது. இந்த ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலாவை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலாவில் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு காலை உணவு, தேநீர், சிற்றுண்டிகள் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். விழிப்புணர்வு சுற்றுலாவில் வினாடி வினா ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும் சுற்றுலாவில் பங்குபெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ்கள், சுற்றுலா சின்னம் பொறித்த தொப்பி, சுற்றுலா சின்னம் பொறித்த தோள் பை ஒன்று மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.நெல்சன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், உதவி சுற்றுலா அலுவலர் திருமதி.நித்ய கல்யாணி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி